1978 செப்டம்பர் 1]

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இசைவு கொடுக்கிறீர்களா? வேண்டியிருக்கிறது; நேரம் இல்லை என்று சொல்கிறீர்கள். லஞ்ச ஊழலை ஒழித்து விடுவோம் என்று தீர்மானித்திருக்கிறது இந்த அரசு. எண்ணம் நல்லதுதான். ஆனால், நாட்டிலே இன்றைக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? லஞ்ச ஊழலை ஒழிக்க வேண்டுமென்ற முறையிலே நாங்கள் ஒரு சட்டத்தைப் போட்டிருந்தோம். 'பப்ளிக் மென் மிஸ்காண்டக்ட் பில்' இங்கே நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தை அவசரம் அவசரமாக நீங்கள் ஒழித்துவிட்டீர்கள். 'அட்வொன்ஸ்', 'இம்மீடியட்' என்று சொல்லி அதற்குப் பதிலாக நீங்கள் ஒரு சட்டத்தைச் சொன்னீர்கள். 'அட்வொன்ஸ்', 'இம்மீடியட்' என்பதற்கு என்ன வந்துவிட்டது? என்ன கொள்ளை போய் விட்டது? அவசரம் அவசரமாகப் பழைய சட்டத்தை ஒழித்து விட்டு புதிய சட்டம் வரும் என்று சொன்னீர்கள். இன்னும் வரவில்லை. கம்யூனிஸ்ட் தோழர்கள் எல்லாம் பழைய சட்டம் ரொம்ப மோசமானது என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்குக் கேரளாவிலே அதைவிட மோசமான ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எங்கள் சட்டத்திலே யார் வேண்டுமானாலும் புகார் கொடுக்கலாம். அதற்குக் காசு கிடையாது. ஓசியிலே கொடுத்தால் போதும். ஆனால், இன்றைக்கு அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத்தின்படி ஏதாவது புகார் கொடுக்க வேண்டுமென்றால் கொடுக்கிறவர் 1,000 ரூபாய் கட்ட வேண்டும். புகார் கொடுக்கிறவர் 1,000 ரூபாய் கட்ட வேண்டுமென்றால் இப்போது நீங்கள் எல்லாம்கூட 1,000 ரூபாய் கட்ட வேண்டும். கட்டினால்தானே புகார் கொடுக்க முடியும். கேரளா பில்லிலே ரொம்ப மோசமான ஷரத்துக்கள் எல்லாம் இருக்கின்றன.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்

(இ) பிறிதொரு மாநில சட்டத்தைப் பற்றி உறுப்பினர்கள் பேசுவது குறித்து

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சனை. உறுப்பினர் அவர்கள் கேரளா சட்டத்தைப்பற்றி இங்கே சொல்கிறார்கள். இன்னொரு மாநில சட்டத்தைப்பற்றி இங்கே பேசுவது சரியா? அதை . . . .

திரு. க. சுப்பு : சார், ஐ ஆம் நாட் ஈல்டிங்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சண்முகம், நீங்கள் உட்காருங்கள். திரு. சுப்பு 'நாட் ஈல்டிங்' என்று சொல்கிறார்.

திரு. க. சுப்பு : கேரளா சட்டத்தை இங்கே என்ன, எங்கே வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் விமரிசனம் செய்யலாம். சட்டம் என்று வந்த பின்னால் அதில் என்ன இருக்கிறது என்பதை யார் வேண்டுமானாலும் விமரிசிக்கலாம். இங்கே விவாதிக்கலாமா என்று கேட்கிறார்கள். விவாதிக்கக் கூடாத சட்டம் அப்படி என்ன இருக்கிறது? அது ஒரு சுண்டைக்காய் சட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கூத்தகுடி சண்முகம் அவர்களின் ஒழுங்குப் பிரச்சினையை நான் உணருகிறேன். கூடு மான வரையில் உறுப்பினர்கள் மற்ற மாநிலங்களைப்பற்றி குற்றம் கூறி இங்கே பேசாமல் இருப்பது நல்லது. பேசக் கூடாது என்று நான் சொல்லவில்லை; குற்றம் கூறிப் பேசாமல் இருப்பது நல்லது என்று சொல்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு கழக ஆட்சியில் விவாதிக்கப்பட்டபோது இங்கே பேசிய கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் கேரள உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதனால் இன்னொரு மாநில சட்டத்தைப்பற்றி இங்கே பேசுவது தவறு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தவறு என்று சொல்லவில்லை. குறைகூறிப் பேசுவதை கூடியவரை தவிர்க்கலாம் என்று சொல்கிறேன்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. க. சுப்பு : 1,000 ரூபாய் கொடுத்து புகார் செய்ய வேண்டுமென்றால் யாரும் முன்வர மாட்டார்கள். ஏனென்றால், 1,000 ரூபாய் பார்த்துவிட்டுத்தான் புகார் எழுத ஆரம்பிக்க வேண்டும். இது எங்கள் மசோதாவைவிட ரொம்ப மோசமானது.